2024 பிப்ரவரி 15]
22—

குழந்தைகள் மையம்

***55018—திரு. A.P. நந்தகுமார்:**

மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அணைக்கட்டு தொகுதி, மேல்அரசம்பட்டு ஊராட்சி, ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் உள்ள குழந்தைகள் மையத்திற்குக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்—மகளிர் உரிமைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

வேலூர் மாவட்டம், அணைக்கட்டு தொகுதி, மேல்அரசம்பட்டு ஊராட்சி, ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் செயல்பட்டுவரும் குழந்தைகள் மையத்திற்கு 2021–2022 ஆம் ஆண்டிற்கான மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் ரூ.10.93 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டுவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் 4–8–2022 அன்று நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, தற்போது கட்டுமானப் பணிகள் நிறைவுபெற்றுள்ளன. அக்கட்டடத்திற்கு மின் வசதி மற்றும் குடிநீர் வசதி ஏற்படுத்துவதற்கு தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வசதிகள் ஏற்படுத்தப்பட்டு பணிகள் முடிவு பெற்றவுடனே, விரைவிலே இம்மையம் புதிய கட்டடத்தில் செயல்படவுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. A.P. நந்தகுமார் அவர்கள் இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. சரஸ்வதி அவர்கள்.

டாக்டர் சி. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி மற்றும் கொடுமுடி வட்டத்தில் அமைந்துள்ள சில அங்கன்வாடிகள், அடிப்படை வசதிகளான மின்சாரம், குடிநீர் வசதி,

[2024 பிப்ரவரி 15

கழிவறை வசதிகூட இல்லாமல் குழந்தைகளும், அங்கன்வாடி பணியாளர்களும் மிகவும் சிரமப்படுகிறார்கள். பழைய அங்கன்வாடி கட்டடங்களின் மேற்கூரை cement sheet-ல் உள்ளதால் கோடை காலங்களில் அவர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். கதவுகள், ஜன்னல்கள் போன்றவை மிகவும் பழுதடைந்துள்ளதால், குழந்தைகள் மழைக் காலங்களில் அங்கன்வாடி மையங்களில் உறங்க முடிவதில்லை. பாம்பு போன்ற விஷப் பூச்சிகள் உள்ளே வருவதால் பாதுகாப்பற்ற நிலை உருவாகிறது. எனவே, குழந்தைகளின் நலனைக் கருத்தில்கொண்டு அங்கன்வாடி மையங்களுக்குப் புதிய கட்டடங்கள் மற்றும் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்துதர வேண்டுமென மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் ஆண்டுக்குப் புதிதாக 500 அங்கன்வாடி கட்டடங்கள் அரசின்மூலம் நிதியொதுக்கப்பட்டு கட்டித் தரப்படுகின்றன. அதுமட்டுமல்லாமல், எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும், அவர்களுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தும் கட்டடங்கள் கட்ட நிதியொதுக்கீடு செய்து வருகிறார்கள். மொடக்குறிச்சி மற்றும் கொடுமுடி வட்டாரங்களிலுள்ள அங்கன்வாடி மையங்களைப் பராமரிப்பு செய்ய வேண்டும்; கழிப்பறை வசதி, குடிநீர் வசதி செய்ய வேண்டுமென்று கூறினீர்கள். அதாவது, இந்த மைய எண் அல்லது இந்த ஊராட்சியிலுள்ள மைய எண் என்று குறிப்பிட்டுச் சொல்லப்படுமாயின், உடனடியாக அவற்றில் பராமரிப்புப் பணிகள், கழிப்பறை வசதி போன்ற அடிப்படை வசதிகளைச் செய்து தர இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜூ அவர்கள்.

திரு. கடம்பூர் ராஜூ: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகக் குறைந்த வயதுக்குட்பட்ட மாணவச் செல்வங்கள் படிக்கின்ற அங்கன்வாடி மையங்களுக்கு, குறிப்பாக, தமிழகம்

2024 பிப்ரவரி 15]

முழுவதும் உள்ள அங்கன்வாடி மையங்களிலுள்ள மாணவச் செல்வங்களின் பாதுகாப்புக்காக சுற்றுச்சுவர், gate *போன்றவற்றை அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜூ அவர்களின் கோரிக்கைபடி சுற்றுச்சுவர் மற்றும் பாதுகாப்பு வசதி செய்ய இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 23, மாண்புமிகு உறுப்பினர் திரு. நிவேதா எம். முருகன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

23—

பேருந்து வசதி

***58255—திரு. நிவேதா எம். முருகன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பூம்புகார் தொகுதி, பொறையாரிலிருந்து தரங்கம்பாடி, மாணிக்கப்பங்கு, வாணகிரி, பூம்புகார், பழையாறு மற்றும் கொள்ளிடம் ஆகிய மீனவக் கிராமங்கள் வழியாக சிதம்பரத்திற்கு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்த கோரிக்கை நிறைவேற்றப்பட்டு அந்த வழித்தடத்தில் பேருந்து இயக்கப்பட்டுவிட்டது என்பதை சபைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. நிவேதா எம். முருகன் அவர்கள்.*